25.10.2024 அ.வ. எண். 74/2016 வா.சா.2 மகேஸ்வரி

4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் தகப்பனார் பெயர் கண்ணப்ப முதலியார். கண்ணப்ப முதலியாருக்கு நான், 1ம் வாதியின் கணவர் பாபு, 4ம் வாதி, 1, 2 பிரதிவாதிகள் வாரிசுகள். பாகம்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 17.10.1983 ஆம் தேதி என் தகப்பனார் இறந்தார். என் தகப்பனார் இறப்பதற்கு முன்பாகவே எனக்கு, 4ம் வாதிக்கு திருமணம் செய்துவிட்டார். என் தகப்பனார் எனக்கு திருமணம் செய்துவைத்தபோது எனக்கு சீர்வரிசைகள் செய்தார். தற்போது சாட்சி செய்யவில்லை என சொல்கிறார். என் தகப்பனார் சீர்வரிசை செய்யவில்லை என தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு திருமணமாகி 49 ஆண்டுகள் ஆகிறது. 4ம் வாதிக்கு திருமணமாகி 50 ஆண்டுகளுக்கும் மேல் ஆகிறது. திருமணமான நாள் முதல் நான் சென்னையில் தான் வசித்து வருகிறேன். 1ம் வாதியின் கணவர் பாபுக்கு திருமணமாகி பெங்களூரில் தான் வசித்து வருகிறார். ஊருக்கு வந்து செல்வார். என் தகப்பனார் 1976 ஆம் ஆண்டு காலிமனையாக தான் கிரயம் வாங்கினார். காலிமனையை என் தகப்பனார் கிரயம் வாங்கியபோதும் 2ம் பிரதிவாதி தான் செலவு செய்து 4 கடைகள் மற்றும் 5 வீடுகளை கட்டினார் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி என் பெற்றோர்களை பராமரித்து வந்ததாலும், செலவு செய்து கட்டியதாலும் என் தகப்பனார் உயிருடன் இருந்தபோதே கடைகள், வீடுகளை 2ம் பிரதிவாதிக்கு ஒப்படைத்து விட்டார் என்றால் சரியல்ல. குடும்ப கடன்களை 2ம் பிரதிவாதி தான் திருப்பி செலுத்தினார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி அ.வ.எண். 43/2021 வழக்கை விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி விக்னேஷ்வரா ஓட்டல் என்கிற பெயரில் ஓட்டல் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். கடை வாடகையை 2ம் பிரதிவாதி தான் வாங்குகிறார் என்றால் நாங்கள் அண்ணன் என்ற முறையில் 2ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்தோம். தாவா சொத்து 2ம் பிரதிவாதியின்

அனுபவத்தில் தான் உள்ளது என்றால் தவறு. தாவா சொத்தில் உள்ள கடைகள் 2ம் பிரதிவாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றும் வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி எங்கள் மீது செய்யாறு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் முதலில் நாங்கள் தான் கொடுத்தோம். அதன்பிறகு அவர் கொடுத்தார். காவல் துறையினர் 2ம் பிரதிவாதி அனுபவத்திற்கு தடைசெய்யக்கூடாது என சொல்லி அனுப்பினார்கள் என்று சொன்னால் சரியல்ல. 2016 ஆம் ஆண்டு பாகம் கேட்டதாக வழக்கில் சொல்லியுள்ளது உண்மை தான். என் தகப்பனார் 1983 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றும் சொத்தில் பாகம் இல்லை என்பதால் தான் 33 ஆண்டுகள் பாகம் கேட்காமல் இருந்துவிட்டு 2016 ஆம் ஆண்டு பாகம் கேட்டோம் என்று சொன்னால் தவறு, கேட்டுக்கொண்டேதான் இருந்தோம். தாவா சொத்தில் நாங்கள் வெளியேறிவிட்டோம் என்றும் 2ம் பிரதிவாதி தான் அனுபவித்து வந்தார் என்று சொன்னால் தவறு. 2ம் பிரதிவாதி தாவா சொத்தில் எங்களை உடமைநீக்கம் செய்து அனுபவித்து வருவதால் எங்களுக்கு பாகவுரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 2ம் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்துக்கள் என்றும் தாவா சொத்தில் எங்களுக்கு பாகம் இல்லை என்றும் அதனால் நாங்கள் தாக்கல் செய்த இவ்வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள வழக்கு அனுமதிக்க வேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.